**கவனிக்க.**- *2017.06.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2025 - 2017 ජූනි මස 23 වැනි සිකුරාදා - 2017.06.23

*2025 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 932 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 935 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூன் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

931 - 81182 - 5403(2017/06)

# பதவிகள் - வெற்றிடம்

## தென்மாகாண அரச சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

*அல்பிட்டிய பிரதேச சபை*

*அல்பிட்டிய பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள தென்மாகாண சபையின் அதிகார எல்லையினுள் நிரந்தர வதிவிடதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**அட்டவணை**

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | மாதாந்த சம்பள அளவு | ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள், மேலதிக தகைமைகள் |
|---|---|---|---|
| சாரதி தரம் III | 01 | PL 3-2016 Grade III ரூபா 25,790 - 270x10 -300x10 330x10 -350x 12- ரூபா38990 | 1. இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க. பொ. த. (சா. த) பரீட்சையில் ஏதாயினும் 06 பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல்.<br>2. வெற்றிடம் நிலவும் மோட்டார் வாகன வகைகளின் சாரதிப் பதவிகளின் தன்மை தொடர்பாக மோட்டார் வாகன ஆணையார் நாயகம் அவர்களால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் ஒன்றினைப் பெற்றிருத்தல் மோட்டார் வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் பெற்றதன் பின் 03 வருட காலமாக வாகனங்களை செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல். |
| அலுவலக பணியாளர் தரம் III | 01 | PL 1-2016 Grade III ரூபா 24,250 - 250x10 - 270x10 - 300x10 - 330 x 12- ரூபா36,410 | 1. இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க. பொ. த. (சா. த) பரீட்சையில் 6 பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தி அடைந்து இருத்தல் வேண்டும். |

**2. வயதெல்லை :-** விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறைவடையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்போது அரச சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிப்பவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை பொருந்தாது).

**3. பொதுவான தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரி வம்சாவழியாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் தென் மாகாண சபை எல்லையினுள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிட்டிய மூன்று வருட காலத்திற்கு நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். அல்பிட்டிய பிரதேச சபையின் அதிகார எல்லையினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டால் ஒரு மாத காலத்தினுள் அரச மருத்துவ பிரசோதனைக்கு உட்படுவதுடன் அப் பரிசோதனையில் உடல்நிலையில் தகுதியற்றவர் என தெரிந்தால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

(iv) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக கண்டு தண்டனை பெற்ற ஒருவர் அல்லது அரச சேவையின் அல்லது உள்ளூராட்சி சேவையில் இருந்து நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

(v) விண்ணப்பதாரி பதவிக்குரிய குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த கல்வித்தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**4. பொதுவான நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது இடைப்பட்ட கால எல்லையில் அல்லது ஆட்சேர்ப்புச் செய்தலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் இவ் அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் உரிமை பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தானதாகும்.

(ii) தற்போது அல்பிட்டிய பிரதேச சபையில் பணியாற்றும் நிரந்தர, பதில் உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**5. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(iii) இந் நியமனம் மூன்று வருடத்திற்கு தகுதிகாண் நிலையில் இருத்தல் வேண்டும்.

**6.** இவ் ஆட்சேர்ப்பு நிபத்தனைகள் மற்றும் விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கும் தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் கட்டளைகளுக்கும் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைவாக சேவையாற்றுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

**7. ஆட்சேர்ப்பு முறை :**

(i) தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**8. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை :**

விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்திய நிழற்படப்பிரதிகளையும் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;

(iv) அண்மைக்காலத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள் ;

(v) தொழில் தகைமை அல்லது அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(vi) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்.

இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை இவ் அறிவித்தலை வெளியிடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், அல்பிட்டிய பிரதேச சபை, அல்பிட்டி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும் (விண்ணப்பப்படிவங்களை A4 அளவுள்ள கடதாசியில் தயாரித்தல் வேண்டும்) பூரணப்படுத்தாத, தெளிவற்ற மற்றும் 2017.07.07 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 2017.07.07 ஆகும்.

செயலாளர்,
அல்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அல்பிட்டிய,
2017, யூன் 01.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

அல்பிட்டிய பிரதேச சபை

.............................................................................................................. **பதவிக்கான விண்ணப்பம் பத்திரம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் : ..............................................................................................................

முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ..............................................................................................................

2. நிரந்தர முகவரி : ..............................................................................................................

3. மாவட்டம் : ..............................................................................................................

4. பிறந்த திகதி :
ஆண்டு : ........................... மாதம் : ........................... திகதி : ...........................

5. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் (07.07.2017) திகதிக்கு வயது :
வருடங்கள்: .......................... மாதங்கள் : ..................................... நாட்கள் : ..........................

6. தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் :..............................................................................................................

7. பால் (ஆண்/பெண்) : ..............................................................................................................

8. சிவில் அந்தஸ்து : விவாகமானவரா? விவாகமாகாதவரா? ..............................................................................................................

9. தேசிய இனம் : ...........................................................................

10. நீர் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தைப் பெறுவது பரம்பரையாகவா? அல்லது பதிவின் மூலமாகவா? என்ற விபரம் : .......................................................

11. கல்வித் தகைமைகள் (சித்தி பெற்ற பரீட்சைகளின் விபரங்கள்) :

(i) சித்தி ஆண்டு/வகுப்பு : ..........................................................................
(ii) க. பொ. த. (சா/தர) பரீட்சை : ...........................................................................
பரீட்சைச் சுட்டெண் : .......................................................................
பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் : .......................................................................
சித்திபெற்ற பாடங்கள் : .......................................................................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

(iii) க. பொ. த. (உ/தர) பரீட்சை : ..........................................................................
பரீட்சைச் சுட்டெண் : ......................................................................
பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் : ......................................................................
சித்திபெற்ற பாடங்கள் : ......................................................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

12. தொழில்நுட்ப தகைமைகள் : ..........................................................................................................................................

13. சேவை அனுபவங்கள் :

14. நீங்கள் எப்பொழுதாவது குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா?
..............................................................................................
அப்படியெனில் விபரங்கள் : ..........................................................................................................................................

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை, பிழையற்றவை என்றும், உறுகி கூறுகிள்றேன் இதில் உள்ளடங்கிய தகவல்கள் உண்மையற்றவை மற்றும் பிழையானவை என்பது நியமனத்திற்கு முன்னர் தெரியவந்தால் தகைமையற்றவனாவேன் என்பதையும், நியமனம் கிடைத்த பின்பு தெரிய வரின் எவ்விதமான நஷ்ட ஈடுமின்றி சேவையிலிருந்து நான் நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ............................................

6- 736

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### யாழ்ப்பாண மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (அத்தியாயம் 252) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் வடக்கு மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான கௌரவ அமைச்சராலும் அனுமதிக்கப்பட்டதன் பிரகாரம் கீழே காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு வீதிகள் பெயரிடப்பட்டுள்ளனவென்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

பொ. வாகீசன்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2017, மே 30.

**அட்டவணை**

| இல. | உள்ளூராட்சி மன்றம் | மாவட்டம் | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் பழைய பெயர் | வீதிக்கு புதிதாக சூட்டப்பட்ட பெயர் | வீதியின் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாண மாநகர சபை | யாழ்ப்பாணம் | J/97 | இல்லை | வைரவர் கோயில் ஒழுங்கை | ஆரம்பம்- சிவப்பிரகாசம் வீதியின் ஆதன இல. - 39 |
| | | | | | | முடிவு-ஆதன இல.- 39/28 |
| 2 | யாழ்ப்பாண மாநகர சபை | யாழ்ப்பாணம் | J/85 | இல்லை | அருட்தந்தை பெனட் அடிகளார் வீதி | ஆரம்பம்- காரைதீவு வீதியின் ஆதன இல. - 474 |
| | | | | | | முடிவு-ஆதன இல.-474/28 |

*6- 720*

---

**பருத்தித்துறை நகரசபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணை விதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி பருத்தித்துறை நகரசபையால் கீழ்க் கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*புவனேந்திரன் ரமேஸ்வரன்,*
*செயலாளர்,*
*பருத்தித்துறை நகரசபை.*

*நகரசபை அலுவலகம்,*
*பருத்தித்துறை.*
*2017 யூன் 02.*

**2017.06.01 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிவிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பபடவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பெறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 01 தொடக்கம் 06 வரையான வடக்கு மாகாண நகரசபைகளுக்கான துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் பருத்தித்துறை நகரசபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் பருத்தித்துறை நகரசபை தீர்மானிக்கின்றது.*

*6-721*

**நாரம்மல பிரதேச சபை**

கால அறிக்கை வழங்குமாறு கட்டளையிடல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப் படி நாரம்மல பிரதேச சபையினால் 2015.05.03 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 2794 இன் கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது பற்றி பொது மக்களுக்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

எச்.ஜே.எம்.எம்.எஸ்.ஜயசுந்தர,
செயலாளர்,
நாரம்மல பிரதேச சபை.

2017, மே 17.

**தீர்மானம்**

*"1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி நாரம்மல பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வரிப்பணம் செயற்பாட்டிற்காக ஏதாவதொரு வீட்டிற்கு, கட்டிடத்திற்கு, காணியிற்கு அல்லது வீட்டுத் தோட்டத்திற்கு ஆண்டுப் பெறுமதியினை மதிப்பிடும் செயற்பாட்டிற்காகவும் அல்லது ஏக்கர் வரி செயற்பாட்டிற்காக ஏதாவதொரு விவசாயம் செய்யப்பட்ட நில அளவினை மதிப்பிடுவதற்காகவும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் செய்யப்படும் அபிவிருத்தி செயற்பாட்டினை திட்டமிடுவதனை எளிது படுத்துவதற்கும் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை பற்றிய சட்டத்தின் 03 ஆம் மற்றும் 05 ஆம் பிரிவுகளின் செயற்பாட்டிற்காக தகவல் அமைப்பினை உருவாக்குவதற்காகவும் உரிய ஏதாவதொரு சொத்தின் உரிமையாளருக்கும் குடியிருப்பாளருக்கும் அதன் வாடகை அல்லது ஆண்டுப் பெறுமதி அல்லது அதன் அளவு மற்றும் வேறு காரணங்கள் பற்றி கால அறிக்கை வழங்குவதற்கு உடன்பட வேண்டும் என்று நாரம்மல பிரதேச சபை தீர்மானிக்கின்றது."*

6-722

---

**நாத்தாண்டிய பிரதேச சபை**

கால அறிக்கை வழங்குமாறு கட்டளையிடல்

*1987 ஆம் ஆண்டின் இலக்கம் 15 இற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப் படி, நாத்தாண்டிய பிரதேச சபையின் அதிகாரம் செயற்பணி மற்றும் கடமைகளை செயற்படுத்துவதற்கு உரிய சட்டத்தின் 9 ஆம் பிரிவினால், உரிய பிரதேச சபை செயலாளராகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 2017.05.24 ஆந் திகதி தீர்மான இலக்கம் 11087 இன் கீழ் இங்கு கீழே காணப்படும் தீர்மானத்தினை எடுக்கப்பட்டது பற்றி பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.*

கே. பி. சந்தன குமார,
செயலாளர்,
நாத்தாண்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நாத்தாண்டிய.
2017, மே 31.

**தீர்மானம்**

*"1987 ஆம் ஆண்டு இலக்கம் 15 இற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப் படி, நாத்தாண்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் மதிப்பீட்டு வரி செயற்பாட்டிற்காக ஏதாவதொரு வீட்டில், கட்டிடத்தில், காணியில் அல்லது வீட்டுத் தோட்டத்தில் ஆண்டுப் பெறுமதியினை மதிப்பிடும் செயற்பாட்டிற்காக மற்றும் அல்லது ஏக்கர் வரி செயற்பாட்டிற்காக ஏதாவதொன்றை விவசாயம் செய்த காணியின் அளவினை மதிப்பீடு செய்வதற்காகவும், பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் செய்யப்படும் அபிவிருத்திப் பணியினை திட்டமிடுவதனை எளிதுபடுத்தவும் 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்திற்கான தகவல்களை அறிந்துக் கொள்ளும் உரிமைகள் பற்றிய சட்டத்தின் 3 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் செயற்பாட்டிற்காக தகவல் அமைப்பொன்றினை உருவாக்குவதற்காகவும் ஏதாவதொரு சொத்தின் உரிமையாளருக்கு மற்றும் குடியிருப்பாளருக்கு அதன் வாடகையினை அல்லது ஆண்டுப் பெறுமதியினை அல்லது அதன் அளவு மற்றும் வேறு காரணங்கள்*

பற்றி கால அறிக்கையினை வழங்குமாறு கட்டளையிடலாம் என்று நாத்தாண்டிய பிரதேச சபையின் அதிகாரம் செயற்பணி மற்றும் கடமைகளை செயற்படுத்துவதற்கு உரிய சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவினால், உரிய பிரதேச சபையின் செயலாளர் என்ற வகையில் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி நான் இத்தால் தீர்மானிக்கின்றேன்."

6- 785

---

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

நியமத்துணை விதிகளை ஏற்றுக் கொள்ளல்

**1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத்துணைவிதிகள்) சட்டம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவில் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வடமாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள நியமத்துணைவிதிகள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 04 ஆம் இலக்கம் 02.05.2017 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 123 (2) ஆவது பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இ. பகீரதன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)

6-786

---

**மஹரகம நகரசபை**

நகரசபைக் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்)

**50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின் படியிலான அறிவித்தல்**

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. அட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

செயலாளர்
சபை கருமங்களுக்கான பொறுப்பாளர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம.
2017, யூன் 06.
செயலாளர் (ப.க)

**அட்டவணை**

| தொடரிலக்கம் | திட்ட இலக்கம் மற்றும் திகதி | வீதியின் பெயர் | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | அட்டவணையின் படி எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 01) | திட்டமிடல் இலக்கம் : 3312<br><br>திகதி : 17.04.25 | கல்பொத்த வீதி குறுக்கு வீதி 240/16F இலிருந்து 240/16C வரையான பாதை | 60 மீ. | 3 மீ. | வடக்கில் :- வீரக்கோன் காணி<br><br>தெற்கில் :- கல்பொத்த வீதி<br><br>மேற்கில் :- திரு. ஏ. ஆனந்த அவர்களின் காணி<br><br>கிழக்கில் : எம். கே. ரீ. ஹேமா தில்ஹாணியின் காணி |
| 02) | திட்டமிடல் இலக்கம்: 2330<br><br>திகதி : 1997.12.25 | பன்னிபிட்டிய கொட்டாவ ஹொரஹேன வீதியின் ஆசிறி மாவத்தை | 159 மீ. | 6.0 மீ. | வடக்கில் :- இவ் வரைபடத்தின் லொட் இலக்கம் 1<br><br>தெற்கில்: ஹொரஹேன வீதியின் குறுக்குப் பாதை<br><br>மேற்கில்: இவ் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 2,3,4,5,6, 7,8,9,10,11,12<br><br>கிழக்கில்: இவ் வரைபடத்தின் லொட் இலக்கம் E |

6 - 888